**கண்டி மாநகர சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்க கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை

வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.**

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 43 வெளித்தரப்பினர்களால் சபைக்கும் மாநகர சபையினால் ஒரு வெளித்தரப்பினருக்கும் எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதும் அவை தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டின் போது சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதாக. | தகவல்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 204,946,131 ஆன முத்திரை கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு: செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டில் சீராக்கி நிதிக்கூற்றுக்களைக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் வீத வரி பட்டியலிடல் வருமானம் ரூபா 339,214,127 ஆக இருந்த போதும் அதே ரூபா 337,462,756 என கணக்கீடு செய்யப்பட்டமையால் வீதவரி ரூபா 1,751,371 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கம் செய்வதாக | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வியாபார அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் வரி ரூபா 412,900 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து அறவிடப்பட்ட வரி வருமானம் ரூபா 5,294,738 ஆக இருந்த போதும் அதே ரூபா 5,768,120 என கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 473,382 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக சீராக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதாக. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி விளக்கு பராமரிப்புக்காக இலங்கை மின்சார சபையிடம் இருந்து 1,247,474 பெற வேண்டி இருந்த போதும் அது ரூபா 663,320 எனக் கணக்கீடு செய்யப்பட்டதால் வருமான கடன்பட்டோர் ரூபா 584,154 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ,ல் உள்ளவாறு மத்திய வியாபாரச் சந்தை மற்றும் சங்கராஜ மாவத்தையில் 18 கடைகளில் இருந்து பெற வேண்டிய கேள்வி தொகை ரூபா 10,932,316 மற்றும் கடை வாடகை ரூபா 1,295,345 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கேள்வித்தொகை மற்றும் கடை வாடகை வருமானம் எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்கப்பட்டு கணக்குகளில் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (எ) | கண்டி வர்த்தக நிலையம் (MCC) கட்டிடத்தில் மீளாய்வாண்டிற்குரிய வாடகை வருமானம் ரூபா 110,235,206 ஆக இருந்த போதும் அது ரூபா 106,773,204 என கணக்கீடு செய்யப்பட்டதால் வாடகை வருமானம் ரூபா 3,461,982 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் சீராக்குவதாக. | - மேற்படி - |
| (ஏ) | சுற்றுலா படகு சேவையில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 319,551 ஆன வருமானத்தில் அடுத்த ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 351,506 கழிக்கப்பட்டு மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 31,955 மீதி ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 351,506 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இக் குறைபாடு தவறுதலாக இடம் பெற்றுள்ளதால் அதை நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்கம் செய்வதாக. | - மேற்படி - |
| (ஐ) | கழிவு நீர் செயற்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற்ற காணப்பட்ட கைத்தொழில் கடன்பட்டோர் ரூபா 9,997,370 தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய நீர் வருமானம் எதிர்காலத்தின் போது சீராக்கி கொள்வதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொஹாகொட கழிவுத்தொகுதியில் காணப்பட்ட ரூபா 8,573,500 ஆன பொதியிடப்பட்ட மற்றும் பொதி இடப்படாத 342,300 கிலோகிராம் உர இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உர இருப்பின் பெறுமதி எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கம் செய்வதாக. | இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஓ) | முன்னைய ஆண்டின் போது மொத்தம் ரூபா 27,838,724 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட இந்த இரண்டு செயற்திட்டங்களின் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு தொடர்ந்தும் செலுத்த வேண்டிய தொகை மொத்தம் ரூபா 27,838,724 தொகைகடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சீராக்குவதாக. | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகையை ரூபா 2,119,255 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக சீராக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதாக. | -மேற்படி - |
| (∴) | வருடாந்த பாதீட்டில் 06 செலவின விடயங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சேமிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் மொத்தம் ரூபா 15,225,000 மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தவறுதலாக கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக சீராக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (க்) | வருடாந்த பாதீட்டு அறிக்கையில் செலவின விடயமொன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,000,000 நிதி ஏற்பாட்டு தொகையை தவறுதலாக கடன் கொடுத்தோரக்கப்பட்டு இருக்கையில் அச் செலவின விடயத்தின் மீளாய்வாண்டின் விளையாட்டு பொருட்கள் கொள்வனவுக்கு செலுத்த வேண்டிய 5,668,780 மீண்டும் கடன் கொடுத்தோர் ஆக்கப்பட்டிருந்தது. | கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ள கடன் கொடுத்தார் மீதிகளை எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டு இருந்த ரூபா 3,617,490 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை | விளையாட்டு உபகரணங்களின் பெறுமதி எதிர்காலத்தில் மூலமாக்கப்படும். | - மேற்படி – |

| | | | |
|---|---|---|---|
| (கா) | மீளாய்வாண்டின் நன்கொடையாக கிடைத்திருந்த 02 மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 11,000,000 மூலதன வருமானம் மற்றும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | வருமான செலவினக் கணக்கில் நன்கொடை, வருமானமாக கணக்கீடு செய்ய முடியாது என. | - மேற்படி – |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறுநிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட 02 சொத்து விடயங்கள் மற்றும் 08 பொறுப்பு விடயங்களுக்குரிய குறித்தஅட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் ஒப்பிட்ட போது ரூபா. 752,466,541ஆன வேறுபாடுகாணப்பட்டது | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கும் போது இந்த இணக்கமின்மை கணக்களை சீராக்கி சரியான அட்டவணைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வேறுபாடுகளை இனங் கண்டு கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலும் நன்கொடையிலும் பங்களிக்கும் கணக்கின் மீதி மற்றும் மொத்த நிலையான சொத்துக்களின் மீதிக்கு இடையே ரூபா 927,689,766 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | இந்த இரண்டு கணக்குகளுக்கு இடையே வேறுபாடு நிலையான சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதி ஆகும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 606,081,324 பெறுமதியான 05 கணக்கு மீதிகள் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கு தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் பொது களஞ்சியம்,, நீர் கைத்தொழில் களஞ்சியம் எழுதிய வரிகள் எழுதுகருவிகள் களஞ்சியக் கணக்கு மெய்மையாயய்வு முடிவடைந்தவுடன் வழங்குவதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு பதிவேடுகள் பேணி செல்லப்பட வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் | | | |
| | 16(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர கட்டளைச் சட்டம் | | | |
| (i) | 234(2) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதில் 1062 கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப் பட்டிருந்த போதும் அதில் 860 நிர்மாணங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதை தவிர்த்துள்ள நபர்களுக்காக நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 266(அ) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது 06 வருமான விடயங்களில் ரூபா 57,538,128 ஆன நிலுவை கட்டணங்களை பதிவு அழிக்கப்பட்டு இருந்த போதும் அதற்காக பொதுச் சபை அங்கீகாரம் மற்றும் விடய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கடந்த சில ஆண்டுகளில் தனிப்பட்ட மீதிகள் மற்றும் முன்கொண்டுவரப்பட்ட மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவதால் வருமானங்களை சரியாக கணக்கீடு செய்யும் நோக்கில் மீதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1978 இன் 42 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வீடுகளின் உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் 03(iv) ஆம் பந்தி | அருப்பொல பல தேசிய வீடமைப்பு தொகுதியில் சபைக்குரிய அரசின் 10 வீடுகளில் குடியிருக்கும் தற்போது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் உரித்து மீள கையளிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 619,688 ஆன் நிலுவை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | உரித்தை மீளக் கையேற்றக்கப்பட வேண்டும் |

### 1.7.2 வரி தேவைகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர் பிரிவினால் வருமானமாக சேகரிக்கப்படும் தண்டபணம் (Surcharge) மீள் இணைப்புக் கட்டணங்கள் (Reconnection fees) மற்றும் நீர் பட்டியல் சீராக்கம் (Adjusment) கட்டணங்களின் கீழ் பாவனையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற வெட் வரித்தொகையை வருமானத்துக்குரிய பெறுமதி சரியாக இனங்காணப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டின் முதலாவது மூன்று காலாண்டுகளுக்காக ரூபா 1,402,548 ஆன வெட் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு குறைத்து அனுப்பியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கவில்லை. | அறவிடப்பட்ட தொகையை அனுப்பி வைக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 627,188,401ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 565,729,320ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மறுக்கப்பட்ட காசோலை பதிவேட்டின் பிரகாரம் 2015 ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டின் மே மாதம் வரையான காலப்பகுதிக்குரிய நீர் பாவனையாளர்கள் இடமிருந்து நீர்க்கட்டண அறவீட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,427,181 ஆன 197 காசோலைகள் மறுக்கப்பட்டி இருந்தன. மறுக்கப்பட்ட் காசோலைகளை தொடர்பாக எவ்வித சீராக்கமும் செய்யப்படாது இருந்ததால் நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து பெற வேண்டியதாக கருதி கணககீடுகு செய்யப்படாமை காரணமா மாநகர சபைக்கு பெற வேண்டிய வருமானம் இறக்கப்பட்டு இருந்தது. | நீர் பாவனையாளர்களால் செலுத்தப்படிருந்த காசோலைகள் மறுக்கப்படும் போது அப் பெறுமதி மறுக்கப்பட்ட காசோலை கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை வங்கியிலும் மக்கள் வங்கியிலும் நடத்தி செல்லப்படுகின்ற 02 நடைமுறை கணக்குகளுக்கு நடைமுறை கணக்குகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய வங்கி கூற்றின் பிரகாரம் மொத்தம் ரூபா | இனங்காணப்படாத வைப்புக்களை தீர்வு செய்வதற்கும் இனங்காணப்படாத கொடுப்பனவுகளை தீர்வு | இனங்காணப்படாத மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 22,826,646 ஆன இனங்காணப்படாத வைப்புக்களும் மொத்தம் ரூபா 527,314 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகளும் மற்றும் வைப்பு செய்யப்பட்ட போதும் நீண்ட காலமாக தீர்வையாகாதிருந்த ரூபா 1,015,214 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கும் தீர்வையாக காசோலைகளை விரைவில் தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | |
| (இ) | வருமானங்களுற்காக கிடைத்திருந்த ரூபா 3,452,525 ஆன மறுக்கப்பட்ட 104 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நானாவித வருமான பிரிவில் ரூபா 1,916,219 தொகைக்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நீர் மற்றும் வீதவரி மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக உரிய பாவனையாளர்களிடமிருந்து அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 990,201,000 | 882,283,117 | 820,914,617 | 589,194,812 | 1,037,531,000 | 762,281,380 | 765,883,323 | 527,826,312 |
| (ii) | வாடகை | 285,829,000 | 253,894,168 | 233,732,302 | 131,724,666 | 356,140,000 | 99,354,750 | 666,440,065 | 111,562,800 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 40,305,000 | 34,770,109 | 34,770,109 | -- | 45,306,000 | 36,208,570 | 36,208,570 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 908,667,000 | 746,595,031 | 592,026,297 | 280,141,845 | 955,493,000 | 686,288,900 | 434,197,593 | 125,573,111 |
| | கூட்டுத் தொகை | 2,225,002,000 | 1,917,542,425 | 1,681,443,325 | 1,001,061,323 | 2,394,470,000 | 1,584,133,600 | 1,902,729,551 | 764,962,223 |

### 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த வருமான மூலங்களிலிருந்து முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 764,962,223 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 1,001,061,322 ஆக இருந்த காரணத்தினால் நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 31 சதவீதமாகும். | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | **வீதவரி** | | |
| (i) | இறுதி திகதியில் உள்ளவாறு வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 50,000 இனை மிகைத்த 1,230 அலகுகளிலிருந்து பெறவேண்டிய ரூபா 194,213,451 ஆக காணப்பட்டது. | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் மதிப்பீட்டு அறிவித்தல் பகிர்ந்தளிக்கும் போது ரூபா 219,958 ஆன 38 நிலுவை வீதவரி ஆதனங்கள் இனங்காணப்பட்டு இருக்கவில்லை. | வீதவரி அலகுகளை இனங்கண்டு வீத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (iii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு வரை வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரியகாலத்தில் வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| **(இ)** | **நீர் வரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 270,713,765 ஆன நீர் வருமான நிலுவையொன்று காணப்படுவதுடன் அதில் ஒரு | சிவப்பு அறிவித்தல் வழங்குதல், தொலைபேசி மூலம் கொடுப்பனவுக்கு செய்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் துண்டிக்கப்படும் | நிலுவை நீர்க்கட்டண வருமானத்தை அறவிடுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அலகின் நிலுவை ரூபா 100,000 இற்கு மேற்பட்ட 32 நீர்பாவனையாளர் ரூபா 8,748,648 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக. | |
| (ii) | நீர் கட்டணங்கள் முறை தொடர்பான கணனி முறையில் 1960 ஆம் இலக்க நீர் பாவனையாளர்களின் தரவு முறைமையில் மூன்று சந்தர்ப்பங்களின் போது மொத்தம் ரூபா 1,557,691 சீராக்கப்பட்டு இருந்த போதும் அதற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் அச் சீராக்கத்துக்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இப் பெறுமதி சீராக்கப்பட்டு பட்டியல் சீராக்கப்படுமென. | நீர் பட்டியலில் சீராக்கம் சரி செய்யப்பட வேண்டும். |
| (iii) | தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 12 நீர் பாவனையாளர்கள் மாநகர சபைக்கு ரூபா 2,708,313 ஆன நீர்க் கட்டணத்தை செலுத்தி உள்ளதாக குறிப்பிடப்பட்டு நீர்கட்டண மென்பொருளில் பாவனையாளர் நிலுவையிலிருந்து கழிக்கப்பட்டு இருந்த போதும் அறவீட்டிற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காளர் (கொடுப்பனவு) இற்கு உறுதிப்படுத்தும் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது குறித்த கணக்காளர் கணக்கு மற்றும் கொடுப்பனவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீதிகளை சீராக்கி சமர்ப்பிப்பதாக. | பெறுவனவு பற்றிச் சீட்டுகள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (iv) | 17791 ஆம் இலக்க நீர் பாவனையாளரிடமிருந்து 2021 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் நீர் பட்டியல் கட்டணமான ரூபா 1,602,884 என்ன பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அது ரூபா 524,478 ஆக இருக்க வேண்டும் என கணக்கிடப்பட்டு ரூபா 1,078,366 தொகை கழிக்கப்பட்டு பட்டியல் திருத்தப்பட்ட போதும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | திருத்தங்களுக்காக அங்கீகாரம் இருக்க வேண்டியதுடன் பற்றுச்சீட்டு சமர்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 12162 ஆம் இலக்க நீர் பாவனையாளரின் நீர் இணைப்பு 2016 ஆம் ஆண்டின் போது துண்டிக்கப்பட்டு இருந்து. மீண்டும் இணைப்பினை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் துண்டிப்பு கட்டணமான ரூபா 1,000 ஐ அறவிடப்பட்டு 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் நீர் மென்பொருளின் தகவல்களின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் மாதம் வரை நீர்ப்பாவனைக்காக பட்டியல் வழங்கப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குரிய சாதாரணன மாதாந்த பட்டியல் ரூபா 112,442 ஆக குறிப்பிட்டால் பட்டியலிடப்படாத 20 மாதங்களுக்காக ரூபா 2,248,853 ஆன நீர் வருமானம் சபையால் இழக்கப்பட்டிருந்தது. | கணக்காயில் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் கணக்கீடு செய்யப்படாத ரூபா 2,248,853 ஆன மீதியை உரிய பாவனையாளரின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | முறையாக பட்டியலிடப்பட்டு நீர் வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (vi) | கண்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் நீர் வழங்கல் செப்டம்பர் 14 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 10,783,035 ஆன நீர் கட்டண நிலுவையாக கணனி மென்பொருளில் குறிப்பிடப்பட்டிருந்தது எவ்வாறாயினும 2018 ஆம் ஆண்டின் போது மிகை கட்டணங்களாக அங்கீகாரம் இன்றி ரூபா 3,831,266 மற்றும் “தவறான பாவனையாளர் இலக்கம் 29363” எனக் குறிப்பிடப்பட்டு ரூபா 2,536,717 தொகை நிலுவையிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2008 மே நீர் பட்டியலில் (ஆரம்ப நீர் பட்டியல்) ரூபா 1,110,140 ஆன மீதி நிலுவையுடன் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.அதன் பிரகாரம் இவ்வாறு தவறாக குறிப்பிட்டபட்டமை காரணமாக கண்டி மாவட்ட வைத்தியசாலையின் நீர் நிலுவை ரூபா 7,478,123 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | அரச நிறுவனங்களில் மிகை கட்டணங்களை நீக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் சீராக்கங்களின் சரியான தன்மையை பரீட்சக்கப்பட்டதாகவும் 29363 ஆம் இலக்க நீர் இணைப்பு பணிப்பாளர் பொது வைத்தியசாலை பேரில் ஆகும். அதற்காக செலுத்திய ரூபா 2,536,747 ஆன தொகை 2402 ஆம் இலக்க பட்டியலில் கழிப்பனவு சீராக்கப்பட்டதாகவும் தவறாக கணக்குகள் சரி செய்யப்பட்டதாகவும். | மிகை கட்டண அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அகற்றப்பட வேண்டியதுடன் நிலுவையில் அறவீடுகள் சரியாக மேற்கொண்டு நீர் பட்டியல் சரியாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | தெரிவு பரிசோதனையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நீர் கட்டணங்களை செலுத்தாத 07 நீர் பாவனையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,057,897 ஆன மிகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 14 நாட்களுக்குள் பட்டியலுக்கு கொடுப்பணவு செய்யாவிட்டால் மிகை கட்டணம் சேர்வதாக. | மிகை கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஈ)** | **காணி வரி** | | |
| (i) | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மருந்து நாற்றுகளுடன் கூடிய காணி மற்றும் மாவில்மட புடவை கைத்தொழில் நிலையம் முறையே 1986 இன் பின்னர் மற்றும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த புடவை கைத்தொழில் நிலையம் 2013 ஆம் ஆண்டு முதல் 2021 நவம்பர் 11 ஆம் தேதி வரை ரூபா 1,733,333 தொகையும் மருந்துகள் நாற்றுக்களும் கூடிய காணிக்காக 2006 ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை காணி மற்றும் கட்டிடங்களுக்காக ரூபா 19,200 தொகையுமாக ரூபா 1,752,533 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | காணி மற்றும் புடவை கைத்தொழில் நிலையங்களுக்கான நிலுவையை ஒரு மாதத்துக்குள் செலுத்துமாறு 2023 மே 29 ஆம் திகதி குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை குத்தகை வாடகை காலரீதியில் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1249 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கண்டி மாநகர சபையையும் உப உறுப்புரை உறுப்புரை 13 (1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மாநகர சபையால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போவல பிரசேத்தின் 99 காணிகளில் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு முதல் வரையான காலப்பகுதியில் மொத்தம் ரூபா 9,473,250 குத்தகை வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் குறித்த குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | 21 காணி துண்டுகளுக்காக தற்போது உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய காணி துண்டுகளுக்காக உடன்படிக்கையை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது அவ்வாறு நிலுவைத்தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை செய்து நிலுவை குத்தகை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (iii) | 2013 ஜூலை 11 ஆம் திகதிய 2013/06 அம் இலக்க உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் | 2012 ஆம் ஆண்டின் பின்னர் காணி குத்தகைக்கு வழங்குதல் இடம்பெறவில்லை 2013 | காணி குத்தகை பணம் கால ரீதியாக அறவிடப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் காணி வரி ஆதனங்களிலிருந்து அபிவிருத்தி அடையாத பெறுமதி உள்ளடக்கப்பட்டு வரித்தொகை அளவிடப்பட வேண்டிய போதிலும் குத்தகைக்கு வழங்கிய 599 காணிகளில் 2008 ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2012 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 58,268,525 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நிலுவை மீதிகள் கணக்கிடப்பட்டு 2023 ஆண்டில் வருடாந்த பட்டியலிடல் இடப்பட்டு நிலுவைத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வேண்டும். |
| (iv) | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் போகம்பர 196, 197 மற்றும் 100 ஆம் இலக்க திட்டத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்ட 43 காணிகளின் குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்படாத இருந்ததுடன் அக் காலப்பகுதிக்குரிய குத்தகை வாடகையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | இந்த காணிக்காக 2012 ஆம் ஆண்டு வரை பட்டியலிடல் இடம்பெறாதிருந்ததுடன் அதற்கு காரணமான விடயங்கள் கோவைகளில் இருந்து கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு குறித்த காலத்தில் வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| **(உ)** | **வாடகை** | | |
| | போகம்பர வியாபார தொகுதியில் 04 வருடங்களாக நிலுவையாக காணப்படும் 45 கடைகளிலிருந்து ரூபா 7,034,650 தொகையான கடை வாடகை அறவிப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடை வாடகை அறவிடப்படல் வேண்டும் |
| **(ஊ)** | **ஏனைய வருமானம்** | | |
| | மீளாய்வாண்டின் ரூபா 3,033,812 கூட்டுத்தொகையான 390 விளம்பர அறிவித்தல் பதாதைகள் கணிப்பிட்டு நடவடிக்கைகளின் போது விடுபட்டு இருந்ததுடன் கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விளம்பர பதாதைகள் தொடர்பாக பௌதீக ரீதியான பரிசோதனையின் போது அவ்வாறு இனங்காணப்பட்ட 11 பாரிய விளம்பர பதாதைகக்கு ரூபா 1,037,512 கட்டணங்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.<br>வருடாந்தம் அறிவித்தல் பதாதைகள் பரிசோதனை ஒன்று மேற்கொண்டு மார்ச் 31 ஆந் | இதுவரை ஸ்டிக்கர் விளம்பர அறிவித்தல் பதாயையாக கணிப்பீடு செய்யப்படாதிஇருந்ததுடன் இதன் பின்னர் அவற்றையும் விளம்பர பதாதையாக கருதி நடவடிக்கை எடுப்பேன் 390 விளம்பர பதாதைகளுக்காக பட்டியலிடப்பட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கணிப்பீடு செய்யப்பட்டு அறிவித்தல் பதாதைகளிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதிக்கு முன்னர் விடய பொறுப்பு உத்தியோகத்தருக்கு கையளிக்க வேண்டிய போதும், கணிப்பீட்டு அறிக்கை உரிய திகதியில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 72,261,900 ஆகவும் இருந்தது. | மேலும் அறவிடுவதற்குள்ள முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் போது டி.எஸ் சேனாநாயக்க பொது நூலகத்தின் கேட்போர் கூடம் தீயினால் அழிவடைந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி 104 பரிசோதனையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 31,250,000 ஆன தொகையை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 254 அ(2) பிரிவின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு அறவிடும் அதிகாரம் மாநகர ஆணையாளரிடம் இருப்பதாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அறிவித்துள்ளது. மிகை அறவீட்டினை செலுத்துமாறு அறிவித்து 2022 செப்டெம்பர் 19 ஆந் திகதிய கடிதத்திலும் அந்த உத்தியோகத்தர் களுக்கு மாநகர ஆணையாளரின் கையொப்பத்துடனான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிதிப் பிரமாணம் 104 பரிசோதனைகள் இலிருந்து தீர்மானிக்கப்பட்ட நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவசெயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர வாகன நிறுத்தும் இடத்தின் மேல் மாடியில் 05 ஆம் பிரிவில் உள்ள திறந்த வெளியரங்கு (சஹஸ் உயண) கடைகள் மதிப்பீடு செய்யப்படாமல் செயற்திட்ட அறிக்கை அடிப்படையில் அதன் இயக்கம், முகாமைத்துவம் பராமரிப்புக்காக செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 03 ஆண்டு களுக்கோ அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் 15 ஆண்டுகளுக்கும் குத்தகையாளரிடமிருந்து ஆண்டுதோறும் எடுக்கும் குத்தகை தொகை அடிப்படையில் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. முதலாவது ஆண்டுக்கு ரூபா 280,000 தொகையும் எந்த வகையில் மிகவும் குறைந்த தொகைக்கு அதிகரிக்கும் வகையில் 15 ஆண்டுகளுக்கு ரூபா 5,265,089 ஆன தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டு இருந்தது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் விடப்பட்ட போதும் மதிப்பீட்டு அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் பொதுச் சபை அங்கீகாரத்தின் பேரில் கேள்வி கோரி குத்தகைக்கு வழங்கப்பட்டதாக | மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | இச்செயற்திட்டத்தின் பௌதீக பரிசோதனையின் போது அதன் பயன்பாடு மற்றும் வருமான அறவீடு தொடர்பான பரிசோதனையும் போது குத்தகையாளரால் மாதமொன்றுக்கு ரூபா 5,539,179 அளவிலான வருமானம் ஒன்று உழைக்கப்பட்டு இருந்த போதும் மாநகர சபைக்கு குத்தகையாளரால் மாதந்த குத்தகையாக ரூபா 280,000 மாத்திரம் வருமானமாக வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. | இவ்வளவு தொழிற்பாட்டு குத்தகையின் கீழ் 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்து. இச்செயற்திட்டத்துக்காக வரைவு குத்தகை முன்மொழிவு தயாரிக்க வரைவு 2021 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் தயாரிக்கப்பட்டதால் அக்காலத்தில் காணப்பட்ட பொருளாதார நிதி, சமூக பின்னணி என்பன தற்போதைய நிலைமையை விட மிக அதிக அளவில் வேறுபட்டு இருந்ததாக. | மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு சீராக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நகர மத்தியில் அமைந்துள்ள சஹஸ் உயண வளவில் 100 விற்பனை கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அதற்காக 127 வியாபாரிகள் பதிவு செய்யப்பட்டு நாளாந்த அடிப்படையில் முயற்சியாளர்களுக்கு வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2022 ஜுலை 07ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அவ்வளவில் இருந்து 100 விற்பனை கூடங்கள் மூலம் ரூபா 4,160,000 ஆன வருமானம் ஒன்றை அண்ணளவாக பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதும் 100 விற்பனை கூடங்களை பயன்படுத்தும் வகையில் வேலைத்திட்டமொன்று திட்டமிடப்படாததன் காரணமாக 2022 யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,499,800 ஆன வருமானம் ஒன்று சபை நிதியத்துக்கு இழக்கப்பட்டு இருந்தது. சஹஸ் உயன வளவில் 100 விற்பனை கூடங்களை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அதில் மாநக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 03 விற்பனை கூடங்கள் உட்பட 60 விற்பனைக் கூடங்கள் அளவில் 2022 யூலை 07 ஆந் திகதி முதல் மூடப்பட்டிருந்தன. | அனைத்து முயற்சியாளர்கக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் நாளாந்த அடிப்படையில் பணம் செலுத்தி விற்பனை கூடங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இன்னும் சில முயற்சியாளர்கள் பணத்தை செலுத்தி விற்பனை கூடங்ளை ஒதுக்கீடு செய்து இருந்த போதும் அவற்றில் வியாபார நடவடிக்கைகளை ஈடுபடாமையால் விற்பனை கூடங்கள் மூடப்பட்டு உள்ள சந்தர்ப்பங்களும் உள்ளன தற்போது எதிர்பார்த்த வருமானம் இந்த விற்பனை கூடங்களிலிருந்து கிடைக்காததால் ஆரம்ப எண்ணங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கேள்வி கோரி குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | அனைத்து விற்பனை கூடங்களையும் பயன்படுத்தப்படும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | 2016 மார்ச் 17 ஆம் 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01(vi) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் டொம்லின் பூங்கா 13 பழைய கடை உரிமையாளர்களுக்கு ஒரு தடவையில் பணம் அறவிடப்படாமல் நீண்ட காலமாக குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் ரூபா 35,400,000 ஆன ஒரே தடவையில் செலுத்தும் பணம் சபைக்கு இழக்காப்பட்டு இருந்தது. 2022 மே 23 ஆந் திகதிய KD/RP/4252 ஆம் இலக்க பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் கொடுப்பனவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதன் | ஒரே தடவையில் பணம் அறவிடப்படவில்லை என்பதாகவும் கடைகள் சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 19 ஆம் திகதிய 08(23) சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்த குத்தகையாளரால் புதிய மதிப்பீடு கடை வாடகை பாரிய அளவில் அதிகரித்துள்ளதால் | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் வாடகை கொடுப்பனவு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,647,195 ஆன கடை வாடகை நிலுவையாக இருந்தது. | கடைகளில் இருந்து கடை வாடகையை குறைத்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனினும் புதிய அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை பட்டியலிடல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக. | |
| (உ) | மாநகர சபைக்குச் சொந்தமான அருப்பொல கிளை நூலகத்தின் நூலக கட்டிடம் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத வகையில் விளைவற்றுஇருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக பரிசீலித்து அறிக்கையிடப்படும். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட செலுத்த வேண்டிய செலுத்த வேண்டிய 07 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,306,347,907 ஆக இருந்ததுடன் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியைவிஞ்சியிருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 776,028,241 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,443,104 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நானாவித கடன்கொடுத்தோர் பொது நீர் மற்றும் சம்பள கடன் கொடுத்தோர் மீதிகளில் 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்டு காணப்பட்ட மீதிகளை எதிர்காலத்தில் தேடி ஆராய்ந்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை மின்சார சபையிடம் இருந்து அறவிடுவதற்கு உள்ள வேலையாக ரூபா 48,599,525 ஆன மீதி ஒன்று கணக்குகளில் தொடர்ந்தும் முன் கொண்டு வரப்பட்டு காணப்பட்ட போதும் அம்மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தேர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளை தேர்வு செய்யப்பட வேண்டும |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவு நீர் செயற்திட்டத்துக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 8,067,600 ஆன பொபி கேப் வண்டி 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் அது 2022 செப்டெம்பர் 10 ஆம் திகதி வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கவில்லை. | பெருமளவில் இவ்வாகனம் அவசர கழிவு நீர் வெளியேற்றல் மற்றும் இடையூறுகளின் போது பயன்படுத்தப்படுவதாக. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் பயன்பாட்டுக்காக சபை பயன்படுத்தப்படுகின்ற ரூபா 107,860,200 ஆன 10 வாகனங்கள் போதிய அளவு பயன்படுத்தப்படாமல் இருந்தமை கணக்காயின் போது அவதானிக்கப்பட்டது. | வாகனங்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வாகனங்களை செயற்திறனான பயன்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 2,950,000 ஆன தளபாடங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் மற்றும் ரூபா 19,236,800 ஆன 96 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலப்பகுதியில் விளைவற்று மற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | 06 வாகனங்கள் தொழில்நுட்ப தவறுகள் கூடுதலாக உள்ளதால் தொழில்நுட்ப வேலை தளத்துக்கு அனுப்புவதற்கும் சில சொத்துக்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதாகவும் ஏலவிற்பனை செய்ய வேண்டிய சொத்துக்களை ஏல விற்பனை செய்யப்படுமெனவும். | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவு நீர் திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 169,768,600 ஆன 31 வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையின் பேரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து 2022 ஜூன் 09 ஆம் திகதி செயற்திட்ட பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக. | வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய அருப்பொலவில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு தொகுதியிலிருந்து 10 வீடுகளை ரூபா 1,700,000 இற்கு 1993 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அதன் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த 10 வீடுகள் தொடர்பாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்ப எடுப்பதாகவும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் சொந்தமான அரசின் வீடுகளின் உரித்தை கையேற்க வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாகஸ்தான வீதி இலக்கம் 97/ஏ இன் அருகில் பாதுகாப்பு சுவர் நிர்மாணித்தல் மற்றும் உடைந்து விழுந்தமை தொடர்பான பரிசோதனை - ரூபா 1,516,014. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு சுவர் மீளாய்வாண்டின் திசெம்பர் 26 ஆம் திகதி சாய்ந்து அழிவடைந்த இருந்தது. | எதிர்காலத்தில் சுவர் உடைத்து அகற்றப்படுவதுடன் அதன் பின்னர் சேதமடை குழாய் முறைமையை மீண்டும் நிர்மாணிப்பதாக. | சேதமுற்றமை தொடர்பாக பரிசோதனையை நடத்தி நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பாதுகாப்பு சுவர் தொடர்பாக 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட திட்டம் ஒன்று இருக்கையில் அதற்கு பதிலாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட பொறியியலரால் அங்கீகரிக்கப்படாத வேறொரு திட்டமொன்றின் பிரகாரம் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | இந்த இடத்தில் வீதிக்கு அண்மையில் மேட்டுப்பகுதி மண்சரிவு காரணமாக வீதிக்கு இடம்பெறும் தாக்கத்தை குறைப்பதற்காக வீதி முறைப்படி தயாரிரத்தன் காரணமாக மேட்டு பகுதியை பாதுகாப்பதற்கு இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. | முறையான அங்கீகாரத்துக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | சுவரின் முழு உயரம் 16 அடியாக இருந்ததுடன் அதில் 14 அடி 06 அங்குளலம் அளவில் நிலத்துக்கு மேல் அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் நிலத்திலிருந்து அத்திவாரம் வரை 1 ½ அடி அளவில் நிலத்துக்கு கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 02 மற்றும் 03 ஆம் இலக்க விடயங்களின்கீழ் 45 மீற்றர் மண்ணை அகற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டு இருந்ததுடன் அதன் ஆழம் 06 அடி மண் அகற்றப்பட்டு சுவர் நிர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் 2½அடி அளவில் மாத்திரம் அகற்றப்பட்டு சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 12 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுவரை நிர்மாணித்து மண்ணை நிரப்புவதற்காக 148 கியுப் மண் போக்குவரத்து செய்யப்பட்டு நிரப்பி பதப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் 08 ஆம் இலக்க விடியத்தில் 15 Weep Hole இற்காக Filter Area மற்றும் Foot Base ஐ தயாரிக்காமல் Weep Hole மாத்திரம் இடப்பட்டு இருந்தது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்த காரணத்தால் இந்த பாதுகாப்பு சுவர் விழுந்து மாநகர சபைக்கு ரூபா 1,516,014 ஆன நட்டம் ஏற்பட்டு இருந்தது. | விஷேட செயற்திட்டத்தில் கடமையாற்றிய இந்த வேலை அத்தியட்சகர் ஓய்வு பெற்றுள்ளார் 03 ஆம் வலய பொறியியாளர் வழங்கிய திட்டத்தின் பிரகாரம் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதாகவும் கொங்கிரீட்டின் தரம் பேணி உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது Weep Hole போதுமான அளவு இல்லை என்பதாக. | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் நியமங்கள் விதந்துரைகளின் பிரகாரம் முறையான மேற்பார்வையுடன் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பாதுகாப்பு சுவர் உடைத்து அகற்றப்பட்ட காரணத்தினால் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட நீர் வழங்கல் முறைமையொன்று முழுமையாக சேதமடைந்து இருந்ததாகவும் அதற்கு இழப்பீட்டு கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தமை புறக்கணிக்க முடியாதுடன் உடைந்து விழுந்த சுவரை அகற்றுவதற்கு அதிக கிரயமொன்றை செலவிடுவதற்கும் நேர்வதாகவும் அவதானிக்கப்பட்டது. | சேதமடைந்த நீர் முறைமையை மீண்டும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பொறுப்பான தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விளையாட்டரங்கிற்காக சூரிய வலு வீதி விளக்குகளைப் பொருத்துதல் -ரூபா 1,612,000 | | |
| | இந் நிர்மாணத்தின் பௌதீக ரீதியாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அளவினைக் கருத்திற் கொண்டு தூணுடன் சோலா பேனல் ஒன்றுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 46,546 என கருத்திற் கொள்ளும் போது தூண் உடன் 13 சூரிய பெனல்களுக்காக ரூபா 605,098 செலுத்த வேண்டிய போதும் அவதனைக் கருத்தில் கொள்ளாமல் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையான ரூபா 1,612,000 தொகை 13 சூரிய சக்தி வீதி விளக்கு தூண்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 1,006,902 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 02 நிறுவனங்கள் பாதத்துடன் வீதி விளக்கு தொகுதிக்காக விதந்துரைகளையும் மற்றும் மாதிரிகளையும் வழங்கி இருந்திருக்கவில்லை. 50 மில்லிமீட்டர் GI குழாயை நில மட்டத்திலிருந்து 08 மீற்றர் உயரத்தில் விளக்குகளைப் பொருத்துவதற்கு விதந்துரை வழங்கப்பட்ட போதும் பராமரிப்புக்காக சிக்கலாக இருப்பதால் உயரம் 6.5 மீற்றரில் பொருத்துவதற்கு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் அதற்காக கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை அந்நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்குள்ள தொகையில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ஒப்பந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட திட்டத்தில் பாதத்தின் நீளம் மற்றும் அகலம் குறிப்பிடப்படாத இருந்ததால் தொலைபேசியில் விசாரிக்கப்பட்ட பாதம் 1'x1' என்ற அளவில் இடுவதாக குறிப்பிடலாம். | நியாயப்படுத்தலுக்கு அறிக்கை தயாரிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். தேவையானவற்றை கருத்தில் கொண்டு மதிப்பீட்டு விதந்துரைகள் தயாரிக்கப்பட்டு முறையான மேற்பார்வையுடன் வேலைகளை நிறைவேற்றி நிறைவேற்றப்பட்ட வேலைகளை பரீட்சித்து அதன் பிரகாரம் கொடுப்பனவு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 70 பதவிகளுக்குரிய 491 வெற்றிடங்களும் 03 பதவிகளுக்குரிய 33 மிகை ஊழியர்கள் காணப்பட்டனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளது. தேவையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதாக. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற 126 உத்தியோகத்தர்களிடமிருந்தும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற, 43 உத்தியோகத்தர்களிடமிருந்தும் மொத்தம் ரூபா 16,217,899 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைக கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |